வங்கிகள் சட்டத் திருத்த மசோதா

மக்களவையில் நிறைவேற்றம்

புது தில்லி, டிச.3: வங்கிக் கணக்குக்கு 4 நியமனதாரர்களை நியமிக்கும் வங்கிகள் சட்டத் திருத்த மசோதா மக்களவையில் செவ்வாய்க்கிழமை நிறைவேற்றப்பட்டது.

தற்போது வங்கிக் கணக்கு வைத்திருக்கும் ஒருவர், தனது நியமனதாரராக ஒருவரை மட்டுமே நியமிக்க முடியும். இதன் மூலம், வங்கிக் கணக்கு வைத்திருக்கும் நபர் உயிரிழந்தால், அவரின் கணக்கில் உள்ள பணத்தை நியமனதாரர் பெற முடியும்.

இந்நிலையில், வங்கிகள் சட்டத் திருத்த மசோதாவின் படி வங்கிக் கணக்கு வைத்திருக்கும் ஒருவர், தனது நியமனதாரர்களாக 4 பேரை குறிப்பிடலாம்.

வங்கித் துறையின் நிர்வாக தரநிலைகள், வங்கிகளில் பணம் செலுத்துவோர் மற்றும் முதலீட்டாளர்களின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்துதல், பொதுத் துறை வங்கிகளின் தணிக்கை தரத்தை மேம்படுத்துதல், கூட்டுறவு வங்கிகளின் இயக்குநர்கள் பதவிக் காலத்தை அதிகரித்தல் உள்ளிட்டவை இந்த மசோதாவின் நோக்கம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கூட்டுறவு இயக்குநர்கள் பதவிக் காலம்...: கூட்டுறவு வங்கிகளின் இயக்குநர்கள் (தலைவர் மற்றும் முழு நேர இயக்குநர் தவிர) பதவிக் காலத்தை 8 ஆண்டுகளில் இருந்து 10 ஆண்டுகளாக அதிகரிக்க மசோதாவில் முன்மொழியப்பட்டுள்ளது. மாநில கூட்டுறவு வங்கி வாரியத்தில் மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநரும் கடமையாற்ற இந்த மசோதா அனுமதிக்கிறது.

மொத்தம் 19 திருத்தங்கள்: இந்த மசோதாவை மக்களவையில் தாக்கல் செய்து மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் செவ்வாய்க்கிழமை தெரிவித்ததாவது:

இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம் 1934, வங்கி ஒழுங்காற்றுச் சட்டம் 1949, பாரத ஸ்டேட் வங்கிச் சட்டம் 1955, வங்கி நிறுவனங்கள் (கையகப்படுத்துதல் மற்றும் பரிமாற்றம்) சட்டம் 1970, வங்கி நிறுவனங்கள் (கையகப்படுத்துதல் மற்றும் பரிமாற்றம்) சட்டம் 1980 ஆகியவற்றில் மாற்றங்களைக் கொண்டுவர, மொத்தம் 19 திருத்தங்கள் மசோதாவில் முன்மொழியப்பட்டுள்ளன. வங்கித் துறையை வலுப்படுத்தவும், வாடிக்கையாளர் செளகரியத்தை மேம்படுத்தவும் இந்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது என்றார்.

'பங்கை 26%-ஆக குறைப்பதே நோக்கம்': இந்த மசோதாவுக்கு எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தன. இதுதொடர்பாக திரிணமூல் காங்கிரஸ் எம்.பி. கல்யாண் பானர்ஜி பேசுகையில், 'பொதுத் துறை வங்கிகளில் மத்திய அரசின் பங்கை 51 சதவீதத்தில் இருந்து 26 சதவீதமாக குறைத்து, அந்த வங்கிகளை தனியார்மயமாக்குவதே மசோதாவின் உண்மையான நோக்கம்' என்றார்.

சிபில் புள்ளிகளால் பாதிப்பு: சமாஜவாதி எம்.பி.ராஜீவ் ராய் பேசுகையில், 'வங்கிக் கடன் சரிவர திருப்பிச் செலுத்தப்பட்டதா, இல்லையா என்பதை தெரிவிக்கும் சிபில் புள்ளிகளால் ஏழைகளும், நடுத்தர மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்' என்றார்.

மறைமுக வங்கிக் கட்டணம்-திமுக எம்.பி. கேள்வி: திமுக எம்.பி. ராணி ஸ்ரீகுமார் பேசுகையில், வாடிக்கையாளர்களிடம் இருந்து மறைமுகமாக வங்கிக் கட்டணங்கள் வசூலிக்கப்படுவதை விமர்சித்தார். ஏடிஎம் சேவைகள் மற்றும் குறுஞ்செய்திகளுக்கு வாடிக்கையாளரிடம் இருந்து வங்கிகள் கட்டணம் வசூலிப்பதை கேள்வி எழுப்பிய அவர், முதியோர்களை குறிவைத்து நடைபெறும் இணையவழி மோசடிகளையும் சுட்டிக்காட்டினார்.

இந்திரா காந்தி குறித்த கருத்தால் வாக்குவாதம்: இந்த மசோதா மீதான விவாதத்தின்போது கடந்த 1974-ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி சம்பந்தப்பட்ட நிகழ்வை பாஜக எம்.பி. சம்பித் பத்ரா குறிப்பிட்டார். இதற்கு எதிர்க்கட்சியினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக திமுக எம்.பி. ஆ.ராசா பேசுகையில், 'முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவையில் இல்லாத போது அவரைக் குறித்து ஏன் பேச வேண்டும்? எந்தவொரு காரணமும் இல்லாமல் அவரின் பெயரைக் குறிப்பிட்டு, அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டை சுமத்துவதற்கு என்ன அர்த்தம்? இது அவை விதி 94-ஐ மீறுவதாகும்' என்றார்.

இதைத்தொடர்ந்து விவாதங்களுக்கு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பதிலளித்து பேசுகையில், 'வங்கிகளை பாதுகாப்பாகவும், ஸ்திரமாகவும் வைத்திருப்பதே 2014-ஆம் ஆண்டுமுதல் மத்திய அரசின் நோக்கமாக உள்ளது. அதற்கான திட்டங்களின் பலனை 10 ஆண்டுகள் கழித்து தற்போது அனைவராலும் பார்க்க முடிகிறது' என்றார்.

இதையடுத்து குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதா நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாட்டில் ஹிந்தி படிக்க முயன்றதால் வீதிகளில் கேலி

தமிழ்நாட்டில் ஹிந்தி படிக்க முயன்றதால் வீதிகளில் தான் கேலி செய்யப்பட்டதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

மக்களவையில் வங்கிச் சட்டத் திருத்த மசோதா குறித்து மத்திய நிர்மலா சீதாராமன் பதிலளித்த போது ஹிந்தியில் பேசினார். அப்போது அவர் ஹிந்தியில் கூறிய வார்த்தை தவறு என்று எதிர்க்கட்சி எம்.பி. ஒருவர் சுட்டிக்காட்டினார். அதற்கு நன்றி தெரிவித்த நிர்மலா சீதாராமன், தமிழ்நாட்டில் தங்களை ஹிந்தி படிக்கவிடாதது குறித்தும் புகார் தெரிவிக்க வேண்டும்' என்று அந்த எம்.பி.யிடம் கூறினார். இதற்கு தமிழக எம்.பி.க்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து நிர்மலா சீதாராமன் பேசுகையில், 'நான் மதுரையில் பிறந்தேன். நான் தமிழ்நாட்டில் பள்ளி மாணவியாக ஹிந்தி படிக்க முயன்றபோது அதற்காக வீதிகளில் கேலி செய்யப்பட்டேன்.

தமிழ்நாட்டில் இருந்துகொண்டு ஹிந்தி கற்கவேண்டுமா? என்று என்னை கேலி செய்தனர். தமிழ்நாட்டில் ஹிந்தியும், சம்ஸ்கிருதமும் கற்பது வெளிநாட்டு மொழியை கற்பது போல பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு இந்தியாவின் ஒரு பகுதி இல்லையா? நான் விரும்பிய மொழியை கற்கும் அடிப்படை உரிமை எனக்கு தமிழ்நாட்டில் மறுக்கப்பட்டது.

ஹிந்தியை திணிக்க வேண்டாம் என்று கூறுவதை ஏற்றுக்கொள்கிறேன். ஹிந்தியை திணிக்க மத்திய அரசும் விரும்பவில்லை. ஆனால் என் மீது ஹிந்தி படிக்கக் கூடாது என்று தமிழ்நாட்டில் திணிக்கப்பட்டது ஏன்? இது திணிப்பு இல்லையா? என்று கேள்வி எழுப்பினார்.

மீண்டும் மாநிலப் பட்டியலில் கல்வி

மாநிலங்களவையில் திருச்சி சிவா கோரிக்கை

நமது நிருபர்

புது தில்லி, டிச.3: கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று மாநிலங்களவையில் திமுக குழுத் தலைவர் திருச்சி சிவா கோரிக்கை விடுத்தார். இது தொடர்பாக அவர் மாநிலங்களவையில் செவ்வாய்க்கிழமை மேலும் பேசியதாவது:

வரலாற்று ரீதியாக மாநில பட்டியலில் இருந்த 'கல்வி', 1976 ஆம் ஆண்டு அவசரநிலையின் போது ஒத்திசைவுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டது. அந்த முடிவு அசாதாரணமான சூழ்நிலையில் எடுக்கப்பட்டு பின்னர் தேவையற்றதாகிவிட்டது. 26 கோடி மாணவர்கள் கொண்ட இந்தியாவின் பரந்த கல்விச்சூழல் பன்முகத்தன்மை என்பது, பிகாருக்கும் கேரளத்துக்கும் தமிழகத்துக்கும் இடையே நிலவும் மிகப்பெரிய கல்வியறிவு விகித இடைவெளியையும், மாநில அளவிலான கல்விக் கொள்கை வகுத்தலின் அவசியத்தையும் நிரூபிக்கிறது.

மத்திய அரசால் உருவாக்கப்படும் கல்விக் கொள்கைகள் பிராந்திய நுணுக்கங்களைக் கவனிக்காது. அது திறமையின்மைக்கே வழிவகுக்கும். உதாரணமாக, பழங்குடியினருக்கான ஏகலைவா மாதிரி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் பழங்குடியின மாணவர்கள், மத்திய கல்விக்கொள்கையால் சவால்களை எதிர்கொள்கின்றனர். மத்திய அரசால் பணியமர்த்தப்படும் ஆசிரியர்கள், அவர்கள் பணியாற்றும் மாநில மொழிகளுடன் ஈடுகொடுக்க முடியாமல் போராடுகின்றனர். அது மாணவர்களுக்கும் கற்பித்தலுக்கும் இடையிலான தொடர்பை துண்டிக்கச் செய்கிறது.

மத்திய அரசின் கல்விக் கொள்கைகள் மாநில முன்னுரிமைகளை எவ்வாறு குறைமதிப்பிடும் என்பதற்கு நீட் ஓர் எடுத்துக்காட்டு. நீட் தேர்வு முறை கிராமப்புறங்களில் இருந்தும் மாநில கல்வித்திட்டம் மூலமும் பயின்று வந்த மாணவர்களின் மருத்துவ கல்விக்கான வாய்ப்பைக் கட்டுப்படுத்தும்.

அதனால்தான் நீட் தேர்வு முறையை தமிழகம் தொடர்ந்து எதிர்க்கிறது. மாநில பாடத்திட்டம், அதன் நீண்டகால உள்ளடக்கிய கல்வி மற்றும் சமூக நீதியை ஊக்குவிக்கிறது. அதைஒரேமாதிரி அணுகுமுறையைக் கொண்ட நீட் தேர்வு முறை குறைத்து மதிப்பிடுவதால், நகர்ப்புற பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கே சாதமாகிறது.

மாநிலங்கள் அவற்றின் சமூக - கலாசார நிலப்பரப்புகளுக்கு ஏற்ப கல்வி முறையை வடிவமைத்துக் கொள்ளும். அதிகாரப் பரவலாக்கம் மாநிலங்களை புதுமையை நோக்கியும் உள்ளூர் தேவைகளுக்கு ஏற்றவாறு கல்வி முறையை கொண்டிருப்பதையும் உறுதி செய்யும். எனவே, மாநில பட்டியலில் கல்வியை மீண்டும் கொண்டு வந்து மாநிலங்களின் சுயாட்சியை மீட்டெடுக்க வேண்டும் என்றார்.

பொதுத் துறை வங்கிகளை இணைக்கும் திட்டமில்லை

மாநிலங்களவையில் அமைச்சர் தகவல்

புது தில்லி, டிச. 3: பொதுத் துறை வங்கிகளை இணைக்கும் திட்டம் ஏதும் மத்திய அரசிடம் இல்லை என்று மாநிலங்களவையில் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் செளதரி செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

கடந்த 2017 முதல் 2020 வரையிலான காலகட்டத்தில் பல்வேறு பொதுத்துறை வங்கிகளை மத்திய அரசு இணைத்தது. இதன் மூலம் நாட்டில் உள்ள பொதுத் துறை வங்கிகளின் எண்ணிக்கை 27-இல் இருந்து 12-ஆக குறைந்தது. இந்தியாவில் சர்வதேச தரத்தில் பெரிய வங்கிகளை உருவாக்கும் நோக்கில் இந்த இணைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்தது.

இந்நிலையில், மீண்டும் இது போன்ற வங்கி இணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற கேள்விக்கு, இணையமைச்சர் பங்ஜ் செளதரி மாநிலங்களவையில் அளித்துள்ள எழுத்துபூர்வ பதிலில், 'பொதுத் துறை வங்கிகளின் நிதிநிலையை மேம்படுத்த மத்திய அரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

வங்கிகளின் செயல்திறனை அதிகரிப்பது, நிதி இடர்பாடுகளைக் குறைப்பது, தொழில்நுட்பரீதியான மேம்பாடு உள்ளிட்ட காரணங்களுக்காக வங்கிகள் இணைப்பு உள்ளிட்ட சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்போதைய சூழ்நிலையில் பொதுத்துறைவங்கிகளை மீண்டும் இணைக்கும் திட்டம் ஏதும் மத்திய அரசிடம் இல்லை.

ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட இணைப்பு நடவடிக்கைகளுக்குப் பிறகு வங்கிகளின் வாராக் கடன் மீட்பு, மூலதன உருவாக்கம் ஆகியவை மேம்பட்டுள்ளது என்றார்.

கைதான 18 மீனவர்களை விடுவிக்கக் கோரி மனு

நமது நிருபர்

புது தில்லி, டிச.3: புதுச்சேரியின் காரைக்கால் பகுதியிலிருந்து கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றபோது இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட காரைக்கால் மற்றும் தமிழக மீனவர்கள் 18 பேரை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் புதுச்சேரி மக்களவைத் தொகுதி காங்கிரஸ் எம்.பி. வே.வைத்திலிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

வெளியுறவு விவகாரத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை புது தில்லியில் செவ்வாய்க்கிழமை நேரில் சந்தித்து அவர் அளித்த மனு:

மீன்பிடிப் படகில் டிசம்பர் 1-ஆம் தேதி இரவு 8 மணியளவில் 18 மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றனர். டிச.2-ஆம் தேதி மாலை 6 மணியளவில் அந்த மீனவர்களை இலங்கை கடற்படை கைதுசெய்தது.

பதினெட்டு மீனவர்களில் 15 பேர் புதுவை யூனியன் பிரதேசத்தின் காரைக்கால் மாவட்டத்தையும், மூன்று பேர் தமிழகத்தையும் சேர்ந்தவர்கள் ஆவர். இச்சம்பவத்தால் காரைக்கால் பகுதி மீனவ மக்கள் அனைவரும் மிகுந்த துயரத்திலும் மன வேதனையிலும் உள்ளனர்.

இந்தவிவகாரத்தில்தலையிட்டு கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை மீன்பிடிப் படகுடன் விடுவிக்க ராஜீய வழிமூலம் இலங்கை அரசை தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிட்டெட் (Arcil)
CIN : U65999MH2002PLC134884 | வலைதளம் : www.arcil.co.in
(M/s. பாலா ஏஜன்சி & M/s மீனா ஏஜன்சீஸ் நிதிச்சொத்துக்கள் தொடர்பாக உருவாக்கப்பட்ட Arcil-Arcil-SBPS 073-1 Trust-Trust-ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படுவது)
ஆர்சில் அலுவலகம் - "தி ரூபி", 10 வது தளம், 29, சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு), மும்பை - 400 028

இணையவழி மின்-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு - கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (சர்ஃபாசி சட்டம்) அதனுடன் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதிகள் 6,8 &9 ஆகியவற்றின் கீழ்

இதன் மூலம் பரவலாக பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், Arcil-SBPS 073-1 Trust-Trust ("ARCIL") ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும் (DBS வங்கியானது ஆர்சில் - க்கு 23 டிசம்பர் 2022 நாளிடப்பட்ட பணி ஒப்படைவு ஒப்பந்தத்தின் வாயிலாக, நிதிச்சொத்துக்கள் பணி ஒப்படைவு செய்யப்பட்டதற்கிணங்க) அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிட்டெட் - க்கு அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்து/க்கள், இதன் கீழ்க்கண்ட விபரங்களின் படியிலான நிலுவைத்தொகை மற்றும் மேற்கொண்டு வரும் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் உள்ளிட்ட தொகையை வசூலிப்பதற்காக, கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (சர்ஃபாசி சட்டம்) அதனுடன் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதிகள் 6,8 &9 ஆகியவற்றின் கீழ் "இருக்கின்ற இடத்தில்", "இருக்கின்ற நிலையில்" "இருக்கின்றவற்றுடன்" மற்றும் "திரும்ப பெறத்தகாத வகையில்" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

கடன்தாரர் பெயர்	**M/s. பாலா ஏஜன்சி & M/s மீனா ஏஜன்சீஸ்** எண் 72, லால்கான் தெரு, சிதம்பரம்- 608001
ஜாமீன்தாரர்கள் / கூட்டு கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் பெயர்	1. திரு.S.பாண்டியன் த/பெ காலஞ்சென்ற P.M. சண்முகம் 2. திரு.P.பாலமுருகன் த/பெ S.பாண்டியன் 3. திருமதி.P.சிவகாமி உரிமையாளர்: M/s மீனா ஏஜன்சீஸ் க/பெ S.பாண்டியன்
29 அக்டோபர் 2014 நாளிடப்பட்ட சர்ஃபாசி அறிவிப்பின் படியிலான நிலுவைத்தொகை	**30 செப்டம்பர் 2014 ம் தேதியின் படி, ரூ. 1,23,84,980.83/- (இந்திய ரூபாயில். ஒரு கோடியே இருபத்து மூன்று லட்சத்து எண்பத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து எண்பது மற்றும் எண்பத்து மூன்று பைசா மட்டும்)** மற்றும் ஒப்பந்த வீதத்தில் / ஆவணத்தில் உள்ள விகிதத்தின் படி மேல் வட்டி மற்றும் 2014 அக்டோபர் 01 ஆம் நாள் முதல் தொகையை திருப்பி செலுத்தும் வரை மேற்கொண்டு வரும் இதர நிகழ் செலவுகள் ஆகியன.
சுவாதீனம்	DBS வங்கி, சர்ஃபாசி சட்டம் 2002 ன் கீழான ஷரத்துகளின் படி, 2015 ஜனவரி 06 ஆம் நாள் அன்று அடையாள சுவாதீனம் எடுத்துள்ளது.
ஆய்வு தேதி	வேண்டுகோளின் பேரில் ஏற்பாடு செய்து தரப்படும்.
டேவணித்தொகை	**இனம் 01 - ரூ. 3,50,000/- (மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) இனம் 02 - ரூ. 2,10,000/- (இரண்டு லட்சத்து பத்தாயிரம் மட்டும்) டேவணித்தொகை RTGS மூலம் "Asset Reconstruction Company (India) Ltd." என்ற பெயருக்கு நடப்பு கணக்கு எண். 02912320000561 HDFC பேங்க் லிமிட்டெட்., கிளை - லோயர் பரேல், மும்பை, IFSC Code : HDFC0000291 க்கு செலுத்தப்பட வேண்டும்.**
விலைப்புள்ளி & டேவணித் தொகை சமர்ப்பிக்க கடைசி தேதி	**08.01.2025 மாலை 05.00 மணி வரை**
குறைந்த பட்ச கேட்பு விலை	**இனம் 01 - ரூ. 35,00,000/- (இந்திய ரூபாயில் முப்பத்து ஐந்து இலட்சம் மட்டும்) இனம் 02 - ரூ. 21,00,000/- (இந்திய ரூபாயில் ரூபாய் இருபத்து ஒரு லட்சம் மட்டும்)**
விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை	**இனம் 01 - ரூ. 20,000/- (இந்திய ரூபாயில் ரூபாய் இருபதாயிரம் மட்டும்) இனம் 02 - ரூ. 5,000/- (இந்திய ரூபாயில் ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)**
மின் - ஏல தேதி & நேரம்	**09.01.2025 - இனம் எண் 1: நண்பகல் 12.30 மணி, இனம் எண் 2: மதியம் 2.00 மணி**
விலைப்புள்ளி ஆவணங்களுக்கான இணைப்பு	www.arcil.co.in
ARCIL க்கு தெரிந்து நிலுவையிலுள்ள வழக்குகள்	**அதிகாரப்பூர்வ அலுவலரின் சிறந்த அறிவுக்கும், தகவலுக்கும் எட்டிய வரையில், சொத்து மீது எந்த நிலுவை வழக்கும் இல்லை**
ARCIL க்கு தெரிந்த வில்லங்கங்கள் / நிலுவைகள்	**அதிகாரப்பூர்வ அலுவலரின் சிறந்த அறிவுக்கும், தகவலுக்கும் எட்டிய வரையில், சொத்து மீது எந்த வில்லங்கங்களும் இல்லை**
ஏலம் விடப்படவுள்ள கடனீட்டுச் சொத்து விபரம்	**இனம் 1** - சிதம்பரம் பதிவு மாவட்டம், சிதம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட, லால்கான் தெரு, வடக்கு, கதவு எண். 72, நகராட்சி பணி எண். 2, ப்ளாக் எண். 14, நகர சர்வே எண். 915 ல் அமையப்பெற்ற 3166 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம், இதில் உள்ள 1609 சதுர அடி பரப்பளவு கொண்ட RCC கட்டடம் மற்றும் அனைத்து இதர உரிமைகள் மற்றும் அதில் உள்ள இதர வசதிகள் ஆகியவற்றுடன் திரு P M சண்முகம் பெயரில் உள்ள சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இது மேலும் முழுமையாக விடுவிப்பு பத்திர எண். 370/1984 தேதி - 13.02.1984 என சிதம்பரம் சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. சொத்தின் உரிமையாளர்: S. பாண்டியன் **இனம் 2** - சிதம்பரம் பதிவு மாவட்டம் மற்றும் சார்பதிவு மாவட்டம், பரமேஸ்வர நல்லூர் கிராமம், சொக்கலிங்கபுரம், மறு சர்வே எண். 106/1 ல் உள்ள ஏக்கர் 1.02 செண்ட்., ல் உள்ள 2580 சதுர அடி பரப்பளவு கொண்ட ப்ளாட் எண். 36 என்ற காலி ப்ளாட் மற்றும் அனைத்து இதர உரிமைகள் மற்றும் அதில் உள்ள இசர வசதிகள் ஆகியவற்றுடன் திரு S பாண்டியன் பெயரில் உள்ள சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இது மேலும் முழுமையாக கிரையப் பத்திர எண். 1854/2003 தேதி - 16.07.2003 என சிதம்பரம் சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. சொத்தின் உரிமையாளர்: S. பாண்டியன்

விதிகள் மற்றும் நிபந்தனைகளாவன :
1) ஏல விற்பனையானது அதிகாரப்பூர்வ அலுவலரால் சர்ஃபாசி சட்டத்தின் ஷரத்துகளின் கீழ், அதன் உதவியுடன் மின் - ஏலம் மூலம் நடைபெறும். விலைகோரல் 'இணையவழி மின்னணு முறை'' வாயிலாக வலைதளம் www.arcil.co.in மூலம் மட்டுமே நடைபெறும். ARCIL என்பது மின் ஏலத்துக்கான தளத்தை ஏற்படுத்தி கொடுக்கும் சேவைதாரராகும்.
2) ஏலமானது விலைப்புள்ளி ஆவணத்தில் உள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளின் படியும் மற்றும் அதில் கொடுக்கப்பட்டுள்ள செயல்முறைகளின் படியும் நடத்தப்படும். ஏலதாரர்கள் ARCIL ன் வலைதளம் www.arcil.co.in யையும் அதில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பு மற்றும் சேவைதாரர் ARCIL ன் வலைதளத்தையும் விலைப்புள்ளி ஆவணங்களுக்கும், ஏலத்துக்கு விடப்பட்டுள்ள ஜாமீன் சொத்துக்களின் விபரங்களுக்கும் / விலைப்புள்ளி படிவங்களை பெறுவதற்கும் பார்வையிடலாம்.
3) ஏலதாரர்கள் தங்களது சொந்த அலுவலகங்கள் / அவர்களது விருப்பத்துக்குரிய இடத்திலிருந்து விலைகோரி / விலைப்புள்ளி சமர்ப்பித்து மின் ஏலத்தில் பங்கேற்கலாம். அந்தந்த ஏலதாரர் இணைய இணைப்பை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அதிகாரப்பூர்வ அலுவலர் / ARCIL / சேவைதாரர் இணையம் தொடர்பிழப்பு, நெட்வொர்க் பிரச்சினைகள், கணிப்பொறி செயலிழப்பு, மின் துண்டிப்பு போன்ற காரங்களுக்கு பொறுப்பல்ல.
4) விபரங்களுக்கும், உதவிக்கும், செயல்முறைக்கும் மின்னணு ஏலம் தொடர்பான இணையவழிப் பயிற்சிக்கும் ஆர்வமுள்ள ஏலதாரர்கள் திரு குருநாதன், திரு யுவிக் J, திரு மிராஜ் சயீத் ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். தொடர்பு எண்கள். 9176500311, 9962005554, 9820485425 மின்னஞ்சல் முகவரி - gurunathan.solaiappan@arcil.co.in, yuvek.j@arcil.co.in, meraj.sayed@arcil.co.in
5) வாங்குவதில் விருப்பமுள்ளவர்கள் / ஏலதாரர்கள் தங்களது பெயர்களை இதன் மேற்குறிப்பிட்ட www.arcil.co.in ல் பதிவு செய்து கொண்டு, இதன் மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் நடைபெறவுள்ள மின் ஏலத்தில் பங்கேற்பதற்கான பயனர் அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை இலவசமாக பெற்றுக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
6) சொத்து ஆய்வு மற்றும் கூடுதல் தகவல்களுக்கு ஆர்வமுள்ள ஏலதாரர்கள் திரு குருநாதன் 91765 00311 (அலைபேசி) gurunathan.solaiappan@arcil.co.in திரு யுவிக் J, 9962005554, (அலைபேசி) yuvek.j@arcil.co.in திரு மிராஜ் சயீத், 98204 85425 (அலைபேசி) meraj.sayed@arcil.co.in அல்லது இதன் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.
7) ஏலத்தின் எந்த நிலையிலும், அதிகாரப்பூர்வ அலுவலர், எக்காரணமும் கூறாமல், எந்த முன்னறிவிப்பும் வழங்காமல், விலைப்புள்ளியை / விலைகோரலை ஏற்றுக்கொள்ள / நிராகரிக்க / மாற்ற / ரத்து செய்ய அல்லது ஏலத்தை ஒத்தி வைக்க உண்டான அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளவராவார்.
8) வாங்குவதில் வெற்றி பெற்றவர் / ஏலதாரரே சட்டப்பூர்வ நிலுவைகள் (ஏதேனும் இருப்பின்), வரிகள், செலுத்தத்தக்க கட்டணங்கள், வாங்கும் விலை மீதான GST, ஜாமீன் சொத்துக்களை தமது பெயரில் பரிமாற்றம் செய்ய / வழங்கப்பெற சட்டப்படி செலுத்தப்பட வேண்டிய முத்திரை தீர்வை, பதிவு கட்டணம் போன்றவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
9) விருப்பமுள்ள ஏலதாரர்கள், தங்களது விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கு முன்பே, ஏலத்துக்கு விடப்பட்டுள்ள ஜாமீன் சொத்து தொடர்பான சொத்துரிமை, வில்லங்கம் மற்றும் ஜாமீன் சொத்துக்களை பாதிக்கும் கோரிக்கைகள் / சட்டப்பூர்வ நிலுவைகள் உள்ளிட்ட நிலுவைகள் போன்றவற்றை சுய சிரத்தையுடன் விசாரித்து தெரிந்து கொண்டிருக்க வேண்டும். இந்த ஏல விளம்பரம் ARCIL ன் எந்த பிரதிநிதித்துவத்தையோ உத்தரவாதத்தையோ வழங்கவில்லை., வழங்கப்போவதுமில்லை. ARCIL ன் அதிகாரப்பூர்வ அலுவலர் எந்த விதத்திலும் மூன்றாம் நபரின் கோரிக்கைகள் / உரிமைகள் / நிலுவைகளுக்கு பொறுப்பல்லர்.
10) இந்த செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஏல அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும், இதன் கீழ்க்கையொப்பமிடப்பட்ட நபரின் சிறந்த தகவலுக்கு எட்டிய வரையில் கூறப்பட்டவையாகும்., எனினும் அதில் ஏதேனும் பிழையோ, தவறான கூற்றோ அல்லது விடுபடல்களோ இருப்பின், அதன்கு இதன் கீழ்க்கையொப்பமிடப்பட்ட நபர் பொறுப்போ / பதில் கூறத்தக்கவரோ அல்லர்.
11) ஏதேனும் நீதிமன்றம் / தீர்ப்பாயத்தின் தலையீடு / உத்தரவு காரணமாக ஏற்படும் நிகழ்வுகள் / பின் விளைவுகளால், விற்பனையை ரத்து செய்ய நேர்ந்தால், (பொருத்தமான சட்ட கருத்துரை மற்றும் ARCIL க்கு உள்ள சட்டப்பூர்வ தீர்வு) ARCIL ஆனது "டேவணித்தொகை" யை வட்டியின்றி வாங்குபவர் / ஏலதாரருக்கு திரும்ப வழங்கிடும் மற்றும் / அல்லது "விற்பனை செயல்முறைகள்" திரும்ப பெற்றுக்கொள்ளும். வாங்குபவரோ / ஏலதாரரோ ARCIL அல்லது அதன் அலுவலர்களுக்கு எதிராக, இழப்பு, சேதங்கள் / செலவுகள் / வியாபார வாய்ப்பிழப்பு போன்ற எவ்விதத்திலான எந்த கோரிக்கையையும் எழுப்ப உரிமையில்லை.
12) மேற்சொன்ன நிலுவைத்தொகைகளுக்கு பொறுப்பாக உள்ள கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் இந்த விற்பனை அறிவிப்பை, இதன் மேற்குறிப்பிட்ட ஏல விற்பனை நடத்தப்படவிருப்பதற்கான, கடனீட்டு சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகளின், விதி 8 மற்றும் 9 ன் கீழான அறிவிப்பு எனவும் கருதிக்கொள்ள வேண்டும்.
13) ஏதேனும் காரணத்துக்காக, இதன் மேற்குறிப்பிட்டவாறு ஏலம் நடைபெறவில்லையெனில், ARCIL க்கு கடனீட்டு சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(5) மற்றும் சர்ஃபாசி சட்டம் 2002 ன் கீழான ஏதேனும் இதர முறைகளின் கீழ், கடனீட்டு சொத்துக்களை விற்பனை செய்ய உரிமை உள்ளது.

ஒப்பம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்
அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிட்டெட்
Arcil-Arcil-SBPS 073-1 Trust - ன் அறங்காவலர்

இடம் - விழுப்புரம்
தேதி - 04-12- 2024

HDFC BANK

ஹெச்.டி.எஃப்.சி பேங்க் லிமிடெட்

கிளை : முதல் தளம் ஐ.டி.சி. செண்டர், 760, அண்ணா சாலை, சென்னை - 600 002. CIN L65920MH1994PLC080618 Website : www.hdfcbank.com.

சொத்தினை கையகப்படுத்துதல் அறிவிப்பு

2002 - ம் ஆண்டின் செக்யூரடைசேஷன் அண்டு ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்டு என்போர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் சட்டத்தின் பிரிவு 13 (12) மற்றும் 2002 - ம் ஆண்டின் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) ரூல்சின் விதி 3 - ன் கீழ் **ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்** (அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் மாண்புமிகு NCLT- மும்பையால் 17 மார்ச் 2023 தேதியிட்ட உத்தரவின்படி முந்தைய ஹெச்.டி.எஃப்.சி லிமிடெட், ஹெச்.டி.எஃப்சி வங்கி லிமிடெட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது) (ஹெச் டி எஃப் சி) நிறுவனத்தால், அதிகாரம் பெற்ற அதிகாரியாக (ஆதரைஸ்டு ஆபீசர்) நியமிக்கப் பட்டவர், கேட்புத் தொகை அறிவிப்பு (டிமாண்ட் நோட்டீஸ்) விடுத்து அதன் மூலம் கீழே விவரிக்கப்பட்டுள்ள கடனாளர்(கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) - க்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை கடன் ஒப்பந்தத்தில் கண்டுள்ள வட்டி விகிதத்தில் மேற்கால வட்டி மற்றும் இதர செலவுகளுடன் அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று கோரினார்.

வரிசை எண்	கடனாளர் பெயர் (கள்)/ உடன் கடனாளர் (கள்) பெயர் (கள்)	மொத்த கடன் நிலுவைத் தொகை	ஈடு பெற்ற சொத்திருப்பு விவரம் (அசையாச் சொத்து) (1 ச.மீ என்பது 10.76 ச.அடிக்கு சமமானது)
1.	**திரு. M.K. காந்தி (கடனாளர்), திரு. R. தமிழ்மகர் (அதிகாரம் பெற்ற முகவர்),** நெ. 5/7, தெற்கு கல்லறை தெரு, திருகுமரன் கோவில் அருகில், கடலூர் - 607003.	31 - ஜூலை - 2024* வரை **ரூ.16,44,555/-** கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி **23 - ஆகஸ்ட் - 2024**	கடலூர் மாவட்டம் மற்றும் நகராட்சி எல்லை, புத்திரிகுப்பம் கிராம எல்லைக்குட்பட்ட டாக்டர். ஜெயலலிதா நகரில் உள்ள புதிய ச.எண். 57/1, புதிய ச.எண். 11/2-ல் 1200 ச.அடி (அ) 111.5 ச.மீ அளவுள்ள மனை எண். 2-ன் மேற்குப் பகுதி மற்றும் அதன் மீதுள்ள அனைத்தும் உட்பட உள்ள சொத்திற்கான எல்லைகள். மனை எண்.1-ற்கு தெற்கே, Dr M.G.R. ரோட்டிற்கு வடக்கே, ரோட்டிற்கு கிழக்கே, மனை எண். 2 -ன் கிழக்குப் பகுதிக்கு மேற்கே. அளவுகள் : கிழக்கு மற்றும் மேற்குப் பக்கத்தில் 32 அடி (9.75மீ), தெற்கு மற்றும் வடக்குப் பக்கத்தில் 37½ அடி. இந்த சொத்தானது கடலூர் மாவட்ட பதிவாளர் அலுவலகம் மற்றும் கடலூர் ஜாயிண்ட் நெ. 2 சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்டது. **சொத்தினை கையகப்படுத்திய தேதி & வகை : 28 - நவம்பர் - 2024 & Symbolic**
2.	**திரு. அருண் பெனடிக்ட் (கடனாளர்), திருமதி. பூங்குழலி (உடன் - கடனாளர்),** மனை எண். 177, ஸ்ரீ அண்ணாமலை நகர் விரிவாக்கம், உச்சிமேடு வருவாய் கிராமம், பாகூர் கம்யூன், பாண்டிச்சேரி - 607402.	31 - மே - 2024* வரை **ரூ.22,16,135/-** கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி **23 - ஆகஸ்ட் - 2024**	பாண்டிச்சேரி மாவட்டம், பாகூர் கம்யூன் பஞ்சாயத்து, உச்சிமேடு வருவாய் கிராம எல்லைக்குட்பட்ட ஸ்ரீ அண்ணாமலை நகரில் உள்ள ச.எண். 59/2A மற்றும் ச.எண். 59/2B, பட்டாப்படி உட் - பிரிவு ச.எண். 59/2B/8C, கதஸ்த்தார் எண்கள். 160 Pt, 161 Pt, 162, 163, 163bis/1, 163/bis/2/2 Pt-ல் 1201 ச.அடி (அ) 111.61 ச.மீ அளவுள்ள மனை எண். 177 மற்றும் அதன் மீதுள்ள அனைத்தும் உட்பட உள்ள சொத்திற்கான எல்லைகள். மனை எண். 176-ற்கு கிழக்கே, மனை எண். 178-ற்கு மேற்கே, காந்தி நகர் மனைகளுக்கு வடக்கே, ரோட்டிற்கு தெற்கே. அளவுகள் : கிழக்கு மேற்காக இரண்டு பக்கங்களிலும் 27 அடி (8.22 மீ), தெற்கு வடக்காக கிழக்கில் 46 அடி (14.02 மீ)தெற்கு வடக்காக மேற்கில் 43 அடி (13.10 மீ). இந்த சொத்தானது பாண்டிச்சேரி மாவட்ட பதிவாளர் அலுவலகம் மற்றும் பாகூர் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்டது. **சொத்தினை கையகப்படுத்திய தேதி & வகை : 28 - நவம்பர் - 2024 & Symbolic**
3.	**திரு. G. ராஜேஷ்குமார் (கடனாளர்),** கதவு எண். 7A, மனை எண். 7A, முதல் தெற்கு தெரு, சின்ன முதலியார், சாவடி, கோட்டக்குப்பம் கிராமம், விழுப்புரம் - 605104.	31 - ஜூலை - 2024* வரை **ரூ.23,87,090/-** கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி **26 - ஆகஸ்ட் - 2024**	திண்டிவனம் மாவட்டம், கோட்டக்குப்பம் கிராமம் மற்றும் நகராட்சி எல்லை, சின்ன முதலியார் சாவடி, தெற்கு தெரு 2- ல் உள்ள பழைய ச.எண். 13/1, புதிய ச.எண். 124/1F, 124/4-ல் 1716 ச.அடி (அ) 159.47 ச.மீ அளவுள்ள கதவு எண். 7A-ல் கட்டப்பட்டுள்ள கட்டிடம் உட்பட உள்ள சொத்திற்கான எல்லைகள். ரங்கநாதன் மனைக்கு வடக்கே, ரோட்டிற்கு தெற்கே, நடைபாதைக்கு கிழக்கே, அம்பிகா மனைக்கு மேற்கே. அளவுகள் : கிழக்கு மேற்காக இரண்டு பக்கத்திலும் 26 அடி (7.92 மீ), தெற்கு வடக்காக இரண்டு பக்கத்திலும் 66 அடி (20.11 மீ). இந்த சொத்தானது திண்டிவனம் மாவட்ட பதிவாளர் அலுவலகம் மற்றும் வானூர் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்டது. **சொத்தினை கையகப்படுத்திய தேதி & வகை : 28 - நவம்பர் - 2024 & Symbolic**
4.	**திரு. S. சீனுவாசன் (கடனாளர்),** மனை எண். 16, ஸ்ரீ சுப்புலெஷ்மி நகர், பணம்பட்டு கிராமம், விழுப்புரம் - 605602.	31 - ஜூலை - 2024* வரை **ரூ.13,01,541/-** கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி **31 - ஆகஸ்ட் - 2024**	விழுப்புரம் நகராட்சி எல்லை, பணம்பட்டு கிராம எல்லைக்குட்பட்ட ஸ்ரீ சுப்பு லெஷ்மி நகரில் உள்ள ச.எண். 15/1A, புதிய ச.எண். 15/1A2-ல் 1040¼ ச.அடி (96.64 ச.மீ) அளவுள்ள மனை எண். 16 மற்றும் அதன் மீதுள்ள கட்டிடம் உட்பட உள்ள சொத்திற்கான எல்லைகள். கிழக்கு மேற்காக செல்லும் இரண்டாம் தெருவிற்கு தெற்கே, மற்ற நிலங்களுக்கு வடக்கு மற்றும் கிழக்கே, மனை எண். 15-ற்கு மேற்கே. அளவுகள் : கிழக்கு மேற்காக வடக்கில் 20½ அடி (6.18 மீ), தெற்கில் 20 அடி (6.09 மீ), வடக்குத் தெற்காக மேற்கில் 50 அடி (15.24 மீ), கிழக்கில் 52¾ அடி (16.12 மீ). இந்த சொத்தானது விழுப்புரம் மாவட்ட பதிவாளர் அலுவலகம் மற்றும் விழுப்புரம் ஜாயிண்ட் நெ. 2 சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்டது. **சொத்தினை கையகப்படுத்திய தேதி & வகை : 29 - நவம்பர் - 2024 & Symbolic**
5.	**திரு. விஜயகுமார் (கடனாளர்),** ஆர்.எஸ். எண். 248/7-ல் உள்ள வீடு, மாரியம்மன் கோவில் தெரு, திருமங்கலம், விக்கிரவாண்டி, விழுப்புரம் - 605501.	31 - ஜூலை - 2024* வரை **ரூ.25,43,314/-** கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி **31 - ஆகஸ்ட் - 2024**	விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தாலுகா, திருமங்கலம் கிராம எல்லைக்குட்பட்ட மாரியம்மன் தெருவில் ஆர்.எஸ்.எண். 248/7, பழைய ச.எண். 126/7-ல் 00065 ச.மீ அளவுள்ள மனை மற்றும் அதன் மீதுள்ள அனைத்தும் உட்பட உள்ள சொத்திற்கான எல்லைகள். ராமு கவுண்டர் மனைக்கு வடக்கே, ரோட்டிற்கு மேற்கே, ராமன் & சரவணன் மனைகளுக்கு கிழக்கே, பெரியவண்ணசாமி மனைக்கு தெற்கே. இந்த சொத்தானது விழுப்புரம் மாவட்ட பதிவாளர் அலுவலகம் மற்றும் கண்டமங்கலம் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்டது. **சொத்தினை கையகப்படுத்திய தேதி & வகை : 29 - நவம்பர் - 2024 & Symbolic**

* **திரும்ப செலுத்தும் நாள்/சொத்தினை பணமாக்கும் வரையில் ஏற்படும் செலவுகள், கட்டணங்களும் சேர்த்து.**

கடனாளர்(கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) கேட்புத் தொகையினைச் செலுத்தத் தவறியதால் இச்சட்டப்பிரிவு 13 (4) மற்றும் மேற்படி ரூல்சின், விதி 8 -ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அடிப்படையில் கீழே கையொப்பமிட்டுள்ளவர் விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை கையகப்படுத்தி சுவாதீனம் பெற்றார் என்று கடனாளருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

எனவே இதில் விவரிக்கப்பட்டுள்ள சொத்தின் சம்பந்தமாக, குறிப்பாக கடனாளர் (கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) - ளும், மற்றும் பொதுமக்களும் எந்த விவகாரங்களிலும் ஈடுபடக்கூடாது என எச்சரிக்கப்படுவதோடு அப்படி ஈடுபடும் விவகாரங்களானவை ஹெச் டி எஃப் சியிடம் உள்ள அடமானம் மற்றும் அவருக்கு நேரே கொடுக்கப்பட்டுள்ள தொகைக்கும் மேற்கால வட்டி மற்றும் இதர செலவுகளுக்கும் உட்பட்டதாகும்.

சட்டத்தின் பிரிவு 13-ன் உட் பிரிவு (8) ன் படி அடமானம் பெற்ற கடனாளர் சொத்தினை மீட்டுக் கொள்வதற்கான கால அளவு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

கடன் பெற்றவர்கள் / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிகள் பஞ்சனாமா (Panchnama) - வில் வரையறுக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் குறிப்பு நகல்களை (பொருந்தக்கூடிய இடங்களில்) அதிகாரம்பெற்ற அதிகாரியிடம் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தேதி : 04 - டிசம்பர் - 2024
இடம் : சென்னை
பதிவு அலுவலகம் : HDFC பேங்க் ஹவுஸ், சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல் (மேற்கு), மும்பை - 400013
HDFC பேங்க் லிமிடெட்டிற்காக
ஒப்பம் அதிகாரம் பெற்ற அதிகாரி

Karur Vysya Bank
Smart way to bank

சொத்து வசூல் கிளை
எண்.1, பத்மாவதியார் ரோடு, 2-வது தளம், (பீட்டர்ஸ் ரோடு அருகில்), கோபாலபுரம், சென்னை - 600086. Ph: 044-28359331/33 Mob: 89398 69789

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி 8(6)-ன் கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு

கரூர் வைஸ்யா வங்கி லிமிடெட்-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்தினை **கரூர் வைஸ்யா வங்கி, ஆரணி கிளையின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **ஆக்கப்பூர்வமான சுவாதீனத்தில்** எடுக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களிடமிருந்து பெறவேண்டிய கடன் தொகையான **₹43,42,475/-** (ரூபாய் நாற்பத்து மூன்று லட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து நானூற்று எழுபத்து ஐந்து மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகளுடன் வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்தினை **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு"** மற்றும் **"எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் **10.01.2025** அன்று விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்: 1.M/s. A செல்வ விநாயகம் கம்பெனி, உரிமையாளர் நிறுவனம், அதன் சார்பாக Mr.A.செல்வ விநாயகம், எண்.32, அப்பாசுவாமி தெரு, கொசப்பாளையம், ஆரணி-632301, திருவண்ணாமலை மாவட்டம், **உரிமையாளர்: 2.Mr.A.செல்வ விநாயகம்,** S/o.Mr.R.ஆறுமுகம், எண்.32, அப்பாசுவாமி தெரு, கொசப்பாளையம், ஆரணி-632301, திருவண்ணாமலை மாவட்டம், **ஜாமீன்தாரர்கள்: 3.Mrs.முத்துலஷ்மி சேகர்,** D/o.Mr.R.ஆறுமுகம், எண்.43/6, ஜியார் நாராயண பாளைய தெரு, காஞ்சிபுரம்-631501, காஞ்சிபுரம் மாவட்டம், **4.Mrs.பத்மாவதி வேணுகோபால்,** D/o.Mr.R.ஆறுமுகம், சின்னசாமி நகர், வேலிங்கப்பட்டறை, ஓரிக்கை, காஞ்சிபுரம்-631502, காஞ்சிபுரம் மாவட்டம், **5.Mrs.கௌரி முருகன்,** D/o.Mr.R.ஆறுமுகம், எண்.11, சீனிவாசன் தெரு, கொசப்பாளையம், ஆரணி - 632301, திருவண்ணாமலை மாவட்டம், **6.Mrs.சரஸ்வதி,** D/o.Mr.R.ஆறுமுகம், எண்.5A/1, 7வது தெரு, செட்டிகுளமேடு, போளூர்-606601, திருவண்ணாமலை மாவட்டம், **7.Mr.A.ஜானகிராமன்,** S/o.Mr.R.ஆறுமுகம், எண்.32, அப்பாசுவாமி தெரு, கொசப்பாளையம், ஆரணி-632301, திருவண்ணாமலை மாவட்டம். **எண்கள் 2-லிருந்து 7 வரை லேட். ஆறுமுகம் அவர்களின் சட்டப்படியான வாரிசுதாரர்கள்.**

அசையா சொத்து விபரம்

செய்யார் பதிவு மாவட்டம் மற்றும் ஆரணி சார் மாவட்டம் எல்லைக்குட்பட்ட பட்டா எண்.2802, சாமந்தவாடி கிராமம், வேலப்பாடி குரூப், ஆரணி தாலுகா, திருவண்ணாமலை மாவட்டம்

ஐட்டம் எண்.1: புஞ்சை சர்வே எண்.37/2A, ஹெக்டேர் 0.05.00, கிஸ்ட் 0.19 இதில் காலி வீட்டு மனையின் அளவுகள் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 90 அடி, தெற்கு பக்கம் 77 அடி, மேற்கு பக்கம் 87 அடி, கிழக்கு பக்கம் 70 அடி, மொத்தம் 6555 சதுர அடி. எல்லைகள்: ராமகிருஷ்ணா மனைக்கு வடக்கு, வந்தவாசி சாலைக்கு தெற்கு, லோகநாத முதலியார் சொத்துக்கு கிழக்கு, பொது தெருவிற்கு மேற்கு.

ஐட்டம் எண்.2: புஞ்சை சர்வே எண்.37/33 (பழைய எண்.37/1), இதில் காலி மனையின் அளவுகள் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 12 அடி, தெற்கு பக்கம் 7½ அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 45 அடி, கிழக்கு பக்கம் 49 அடி, மொத்தம் 559 சதுர அடி. எல்லைகள்: லோகநாதன் விற்ற மனைக்கு வடக்கு, குப்பன் மனைக்கு தெற்கு, T.கிருஷ்ணமூர்த்தி & T.லோகநாதன் மனைக்கு கிழக்கு, ஐட்டம் எண்.1-க்கு மேற்கு.

ஐட்டம் எண்.3: புஞ்சை சர்வே எண்.37/33 (பழைய எண்.37/1), இதில் காலி மனையின் அளவுகள் கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 12 அடி, வடக்கு பக்கம் 1 அடி, வடக்கு தெற்காக 50 அடி, மொத்தம் 600 சதுர அடி இதில் பொதுவான பாதி 300 சதுர அடி. எல்லைகள்: ஐட்டம் எண்.1 & 2-க்கு வடக்கு, ஆரணி வந்தவாசி சாலைக்கு தெற்கு, G.குப்பன் மனைக்கு கிழக்கு, ஐட்டம் எண்.1 & 2-க்கு மேற்கு.

மேற்கண்ட மூன்று ஐட்டங்களும் தற்போது ஒரே யூனிட்டாக உள்ளது மேலும் இது மதில் சுவருடன் காலி மனை ஆகும்.

1-லிருந்து 3 வரை ஐட்டங்களின் மொத்தம் = 7417 சதுர அடி. **(6555+559+300).**

Geo Coordinates:12.65862, 79.29597

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 1,25,00,000/-; டேவணித்தொகை: ₹ 12,50,000/-; ஏல உயர்வு தொகை: ₹ 1,00,000/-

சொத்துக்களை பார்வையிடும் நாள் & நேரம்: 04.12.2024 முதல் 09.01.2025 வரை காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அனைத்து வேலை நாட்களிலும் சொத்துக்களை பார்வையிடலாம்.

இ-ஏல விண்ணப்ப படிவங்களை ஆன்லைனில் சமர்பிக்க வேண்டிய கடைசி தேதி & நேரம் 09.01.2025 அன்று மாலை 5.00 மணி வரை

இ-ஏலத் தேதி மற்றும் நேரம்: இ-ஏலமானது **www.matexauctions.com**-என்ற இணையதளத்தின் வாயிலாக நடைபெறும் **10.01.2025** அன்று மாலை **03:00** மணி முதல் மாலை **04.00** மணி வரை விற்பனை முடியும் வரை ஒவ்வொரு 10 நிமிட சாலவரையற்ற நீட்டிப்புகளுடன்

Nodal Bank Account Name: The Karur Vysya Bank Ltd., Central Office Bid Collection A/c. No. 1101351000000973, IFSC Code: KVBL0001101. EMD for auction in the account of M/s.A Selva Vinayagam Company

தொடர்புகொள்ள வேண்டிய நபர் & தொலைபேசி எண்: முதன்மை மேலாளர்- 89398 69789, 99426 06507 Gen Ph Nos. 044 – 28359331 / 33 e-Mail: arbchennai@kvbmail.com

விற்பனை குறித்த விரிவான விபரங்களுக்கு பாதுகாக்கப்பட்ட கடனளித்த வங்கியின் இணையதளத்தில் பார்வையிடலாம்: www.kvb.co.in / Property Under Auction சொத்துக்களை ஏலம் விடும் இணையதள முகவரி: **https://www.matexauctions.com** சேவை வழங்குநர் **M/s. Matex Net Pvt. Ltd.**

SARFAESI சட்டம், 2002 விதி 8(6)-ன்கீழ் 30 நாள் கால அவகாச விற்பனை அறிவிப்பு

மேற்காணும் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பதாவது யாதெனில் மேற்காணும் கடன் பாக்கியை **10.01.2025** இ-ஏலத்தேதிக்கு முன்னர் செலுத்தத் தவறினால் அந்த சொத்து ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு கடன்பாக்கி வசூலிக்கப்படும். பின்னர் பாக்கி ஏதேனும் இருந்தாலும் வட்டி, இதர செலவுகளுக்கும் தங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

தேதி : 02.12.2024
இடம் : சென்னை
அதிகாரப்பூர்வ அதிகாரி
கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்